
# மூழ்கும் உலகம் !




**துவாலு மற்றும் மூழ்கும் தீவு நாடுகளையும் காப்பாற்றுவோம்**

# துவாலு


ஹ்யுகோவுக்கும் மமாவாவுக்கும் 10 வயதாகிறது. முதலவன் ஐரோப்பிய நகர் ஒன்றிலும் இரண்டாமவள் துவாலுவிலும் வசிக்கிறார்கள். துவாலு உலகின் நாலாவது சிறிய நாடு. பாரிசைப்போல 10 மடங்கு சிறியது. 9 தீவுகள் கொண்ட இந்நாடு ஆஸ்திரேலியாவிற்கு கிழக்கே, ஃபிஜி தீவுக்கு வடக்கே, உலக உருண்டையில் ஐரோப்பிய கண்டத்திற்கு எதிர்புறத்தில் உள்ளது. அங்கு மக்கள் துவாலுவான் என்ற 16 எழுத்துகள் கொண்ட மொழியைப் பேசுகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இந்தக் குட்டி நாட்டிற்குக் கடலால் ஆபத்து அதிகரித்து வருகிறது. மேலும்மேலும் உயரும் உயரமான அலைகள், அடிக்கடி உயரும் கடல் மட்டம். கடல்நீர் மண்ணில் புகுந்துவிடுவதால் மழைநீர் மண்ணில் இறங்குவதில்லை. கடலின் உப்பு பயிர்களை அழிக்கிறது. அழிந்துவரும் மரங்களால் காற்றின் வேகம் கட்டுப்படுவதில்லை. மண்ணும் நிலமும் அலைகளால் இழுக்கப்பட்டு மண்ணரிப்பு ஏற்படுகிறது.

இந்தத் தட்பவெப்ப நிலை பற்றி நாம் கவலைப்படாமல் இருந்தால் 11000 துவாலு மக்களும் விரைவில் ஒருநாள் தம் தாய்நாட்டை இழக்க நேரிடும். இப்படி தட்பவெப்ப மாற்றத்தால் நாடு இழக்கும் முதல் அகதியினர் அவர்களாகத்தான் இருப்பார்கள்.

## தட்பவெப்ப நிலை மாற்றம் .... என்றால் என்ன?

இதனை புரிந்துகொள்ள நீங்கள் ஏவுகணை விஞ்ஞானியாக இருக்கவேண்டியதில்லை! பூமியின் சராசரி வெப்பம் 15° C (59° F) அதுவும் கிரீன்ஹவுஸ் எனப்படும் பசுங்குடில் விளைவுகளால். அதுமட்டும் இல்லையேல் இங்கு -18° C ஆக இருக்கும். நாமும் ஏனைய உயிரினங்களும் வாழமுடியாது. பூமி தன் வெப்பத்தை நிலைப்படுத்திக்கொள்ள சூரிய ஒளியை அண்டத்தில் நுழைய விடுகிறது. இந்த வெப்பம் பூமியைத் தாக்கி பிரதிபலிக்கின்றன. மேகங்களும் கரியமி வாயு போன்ற பசுங்குடில் வாயுக்களும் வெப்பத்தைக் கிரகித்துக் கொள்கின்றன. அதனால்தான் நாம் உலகில் உயிர்வாழ முடிகிறது. நம் வாழ்க்கை முறையினால் நாம் மேலும்மேலும் இந்த பசுங்குடில் வாயுக்களை உருவாக்கி பூமியின் வெப்பத்தை மிகவும் அதிகமாக்குகிறோம். தட்பவெப்ப நிலை மாற்றத்திற்கு இதுவே காரணம். பனிப்பாறைகள் உருகுகின்றன. கடல் மட்டம் உயர்ந்தவண்ணம் இருக்கிறது. புயல்களும் வெள்ளங்களும் மேலும் தீவிரமாகவும், அடிக்கடியும் தாக்குகின்றன. மேலும் சூழ்நிலைக்கேற்ப மாறமுடியாத உயிரினங்கள் அழிகின்றன. நாம் இப்படியே அக்கறையில்லாமல் தொடர்ந்தால் ஏராளமான மக்கள் உலகின் ஒரு பகுதியைவிட்டு வேறு பகுதிக்குக் குடியேற நேரிடும்.

இதற்கு யார் காரணம்? நாம்..! நாமேதான்..!!! நாம் விமானங்களாலும், மோட்டார் வாகனங்களாலும், தொழிற்சாலைகளாலும், விவசாய முறைகளாலும், வீடுகளைக் குளிரூட்டுதல் மற்றும் வெப்பமாக்குவதாலும்.... நாம் இணைந்து செயல்பட்டு, தினமும் நம் செய்கைகளைப் பொறுப்புணர்வுடன் மாற்றிக்கொண்டால் தட்பவெப்ப நிலை மாற்றத்தின் வேகத்தைக் குறைக்கமுடியும். துவாலுவையும் அதன் மக்களையும் காப்பாற்றலாம். ஹ்யுகோ மமாவா மற்றும் சிப் சொல்வதைக் கேளுங்கள்... அ படியே செய்து பாருங்கள்





துவாலுவைத் தொடரும் துன்பம் என்ன
நமது செயல்களின் தாக்கம் அங்கே
மெல்ல மெல்லக் கடலின் அடியில்
மறைந்து போவார் இயற்கையின் மடியில்

கடலின் அலைகள் கரையைத் தாக்கும்
துவாலு கடலில் மூழ்கிப் போகும்
எண்ண அலைகள் மனத்தைத் துளைக்கும்
இனியும் வாளா இருந்திடலாமோ

உள்ளம் இருந்தால் உலகைக் காக்கலாம்
உண்மையாய்த் துவாலுவை உவப்புடன் காக்கலாம்
உறுதி கொண்டு செயலில் காட்டினால்
மாந்த இனமும் வளமுடன் திகழ்ந்திடும்

கனவுகள் ஒருநாள் நனவுகள் ஆகும்
துவாலு தீவின் துன்பம் மறையும்
நமது செயல்கள் அனைத்தும் அவர்க்கே
நன்மை புரிந்திடும், நமக்கும் நலமே

(மூலம் ஃப்ரேஞ்ச் மொழியில் கென்ட் அவர்கள் - தமிழ் மொழிபெயர்ப்பு ஆனந்த் அவர்கள்)




தலோஃபா* என்றால் துவாலு மொழியில் "ஹலோ" என்பதாகும்




கவனமாய் கேளுங்க. நல்ல செயலைப் பாராட்டுவேன். இல்லையேல் சொறி கொடுப்பேன்.
.. நாள் தொடங்குகிறது ...
SUPER
இவங்க உலகின் எதிர்புறம் இருப்பதால் தலைகீழாக படம் போட்டோம். இப்போ நீங்க புரிஞ்சுகிட்டதால எல்லாரையும் நேரா போடுவோம். சரியா ?
ஹ்யுகோ பல் துளக்கும் போது குழாயை மூடுகிறான். சபாஷ் ! தண்ணீர் விலைமதிப்பற்றது !!
இன்று காலை ஃபினாஃபுட்டியில் மழை. கூரையிலிருந்து கொட்டும் நீரில் குளிக்கலாம் மழைநீர் தொட்டியெல்லாம் நிரம்பியது
ஹ்யூகோ விளக்கை அணைக்கிறான்
கிளிக்
CLIC !
வேலை இல்லாதபோது கணிணியை நிறுத்தவில்லை மின்சாரம் வீணாயிற்று சொறி உனக்கு !!!
SCRATCH
SCRATCH
மமாவா தன் தந்தைக்கு உதவியாக எஞ்சிய சாப்பாட்டை விலங்குகளுக்குத் தருகிறாள்
சபாஷ் ! விலங்குகள் கழிவிலிருந்து புதுப்பிக்கும் எரிபொருள் பெறுகிறோம்.




காலை உணவாக ஹ்யுகோவின் அக்கா சிறிய டப்பாகளிலிருந்து தயிரும், தனித்தனி பொட்டலங்களிலிருந்து பருப்பு வகைகளும் உண்கிறான்.
எல்லாம் தப்பு ! இரண்டு பேருக்கும் சொறி !!
மமாவாவின் தம்பி புட்டியிலிருந்து பழரசமும்; கம்பெனியால் பார்சல் செய்த வட்ட ரொட்டிகளும் சாப்பிடுகிறா
SCRATCH
எனக்குப் பிடித்தது சுவையுள்ள புதிய ஆரஞ்சு பழச்சாறும் ரொட்டியும் ஜாமும்.
அப்பா தயாரித்த பலாப்பழமும், கள்ளும் எனக்குப் பிடிக்கும்.
ஆஹா ! நணபர்கள் இருவருக்கும் சபாஷ்
மாசுற்ற காற்று மறுபடியும் வீசுகிறது. சிறார்களும், வயதானவர்களும், நோயாளிகளும் வெளியே வரவேண்டாம்
போச்சுடா
காற்றின் வேகம் இன்று குறைந்துள்ளது. சிறிய மீன்பிடி படகுகள் கடலில் சென்றன. சரக்கு கப்பல் இன்று மாலை துறைமுகம் வரக்கூடும்.
ஆஹா. பிரமாதம்





பள்ளிக்குச் செல்லும் நேரம்
கண்ணாடி புட்டிகளை மீண்டும் பயன்படுத்தும் கண்ணாடித் தொட்டியில் போடு.
ஓகே !
கவனம். ப்ளாஸ்டிக் புட்டி ப்ளாஸ்டிக் தொட்டியில் போடு
ஃபினாஃபுட்டியில் மழை நின்றது.
வாழைப்பழத் தோலும் தாவரக் கழிவுகளும் எருக்குழியில். சபாஷ் !
ஹ்யுகோ நண்பர்களுடன் பள்ளி செல்கிறான்.
அதோ பாருடா அலெக்ஸ் அவனுடைய அம்மா காரில்
சரிதான் இன்னிக்கும் தாமதமா வருவான் போ
PLUS!
MAP
TUUT
MAP
TUUT
அது மட்டுமல்ல ! இந்த வண்டிகள் விடும் நச்சு வாயுக்களால குட்டித் தீவுகள் எல்லாம் மூழ்கிப் போகும் !!!
உண்மை யாகவா?
துவாலுவில் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலக்குது.
சுவைத்துப்பார் ! இந்த குட்டைநீர் உப்புகரிக்குது
உவே.... ஆமா !!
நில அரிப்பு ஏற்படுகிறது
ஐயோ ! மரமெல்லாம் வேரோடு சாயுதே !!!



ஹ்யுகோவின் வகுப்பறையில் சூடாக்கும் பொறி அருகே குளிருது.
சன்னல்கள் சரியாக மூடப்படவில்லை பிடி சொறி!
துவாலுவில் நாறும் டீசல் ஜெனரேட்டர்களால் மின்சாரம் தயாரிக்கப் படுகிறது. ஆனால் மமாவாவின் பள்ளியில் சூரிய ஒளி விளக்குகளும் காற்றாலை மின்உற்பத்தி
அப்படியும் சொறிதான்! முன்னாடியே செய்திருக்கலாமே
POUTOUPPOUT
ஹ்யுகோ பள்ளி உணவகத்தில் உண்கிறான்.
ஆஹா, இன்னைக்கு மீன்
தப்புதப்பு அது பணியாரம்
துவாலுவில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பகலுணவு கொண்டு வருகிறார்கள்.
பகலுணவுக்குப் பிறகு ஹ்யுகோவின் வகுப்புப் பிள்ளைகளை ஆசிரியர் நகராட்சி கால்பந்து
ஃபினாஃபுட்டியில் விமான நிலையம் தான் விளையாட்டு மைதானம். வாரத்திற்கு மூன்றே விமானங்கள் தான் வருகின்றன
ஏய், கோல் போஸ்ட்டை நகர்த்துங்க.. சீக்கிரம் !!!


விளையாட்டுக்குப் பிறகு பொது குளியல் அறையில் பிள்ளைகள் கும்மாளம் அடிக்கின்றனர்
ஜாக்கிரதை.. நீரை வீணாக்காதே !!
மமாவா பள்ளியில் விடுமுறையைக் கொண்டாட விருந்து தயார் ...
உங்களுக்கு சொறிதான்! எல்லாம் மக்காத கழிவுப் பொருள்கள்
ஹையா.. கிறிஸ்துமஸ் விடுமுறை...
உன் பழைய சுவடிகள் இருக்கின்றனவா?
TUT TUT TUT
ஆம்! ஏட்டின் பின்புறம் படம் வரைவேன். மறு பயன்பாடு.
மமாவாவும் நண்பர்களும் தரையில் கிடக்கும் காலிகுப்பிகளைச் சேகரித்து விற்று கைச்செலவிற்குக் காசும் பெறுகிறார்கள்.
ரெண்டு பேருக்கும் சபாஷ் !
எல்லா குழந்தைகளையும் போல அவர்களும் கொண்டாடுகிறார்கள்
ஹ்யுகோ சறுக்குப் பலகையில் ஜமாய்க்கிறான்
தேங்கிய மழைநீரில் மமாவா விளையாடுகிறாள்



கிறிஸ்துமஸ் விருந்துக்கு பொருட்கள் வாங்குவது ஹ்யுகோவுக்கு சோதனைதான். பாவம்
ஆஹா, மின்சார சிக்கன விளக்குகள் ...
சபாஷ் !!!
HYPERGRO
ஏய்! என்ன அது? ப்ளாஸ்டிக் பையா? பலமுறை பயன்படும் பைகளே சிறந்தவை
SCRATCH SCRATCH
மமாவாவுக்கும் அவளது தந்தைக்கும் மாதாந்திர சரக்கு கப்பல் வருவது பெரும் மகிழ்ச்சி !
ஏய்! அங்க பாரு... பக்கத்து வீட்டுக்கு புது கார் வருது
ஃபினாஃபுட்டியில் இருப்பதே ஒரே சாலை. அதுவும் 11 கி.மீ. (7 மைல்)
இங்கே கா தேவையே இல்லை. சொறி உனக்கு
SCRATCH SCRATCH
ஹ்யுகோ வீட்டில் குளிரூட்டியை மூட முடியாத அளவிற்கு உணவுப்பொருட்கள்
ஏய்! ஏய்! சரியா மூடு!!
மமாவாவின் வீட்டில் சமைக்க உணவும், காய் கனிகளும், கொதிக்க வைத்த மழைநீரும் (அதுதான் குடிக்க நல்லது)



பள்ளி விடுமுறை. இன்று மாலை ஹ்யுகோ வீடியோ விளையாடுகிறான்.
மாலை இசை, நடன விழாவிற்கு உணவு சமைக்க மமாவா தன் தாய்க்கு உதவுகிறா
ஹ்யுகோவின் பெற்றோர் சினிமாவுக்கு போய்விட்டனர். அக்காதான் அவனைப்
ஃபாதெலே கொண்டா
AM TAM
TAP TAP
ஆஹா தூக்கம் வந்திடுச்சு
கணிணியை நிறுத்த வேண்டும்
சபாஷ்!
க்ளிக்
SIB
அந்த நாளும் முடிந்ததது

ஹ்யுகோவுக்கும் மமாவாவுக்கும் இரு வேறுபட்ட வாழ்க்கை முறைகள் இருந்தாலும் பொதுவான பல பண்புகள் உள்ளன. இருவருக்கும் தொலைக்காட்சியில் திரைப்படம் காண்பது பிடிக்கும்.








ஐயோ!! என்னால் நம்பவே முடியவில்லை! இந்த நாட்டைவிட்டே போக வேண்டுமா? நாடே மூழ்கிவிடுமா?? என் தீவை விட்டு என்னால்போகவே முடியாது. என் நாட்டை நேசிக்கிறேன் !! கடைசி வரை இங்கேயே வாழ நினைக்கிறேன் !!!

உலகத்தாரே கேளுங்கள் : எங்கள் குட்டி துவாலுவைப் பாருங்கள். உங்கள் வளங்களை நீங்கள் பெருக்கிக்கொள்ள வேண்டியதுதான். பசிபிக் கடலில் உள்ள எங்களைப் பற்றியும் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். எங்களைப் போன்று கடல் மட்டத்துக்கு அருகே உள்ள மற்றவர்களையும் மறக்காதீர்கள்





தாய்நாட்டைப் போன்ற சிறந்த இடம் வேறில்லை. என்ன இருக்கிறது என்று கவலை வேண்டாம். இது அழகானது. வாருங்கள். கண்டுகளியுங்கள். வெகுவிரைவில் இந்நாட்டைப் பார்க்கமுடியாது. மூழ்கிவிடும்.

## பசுமைப் பக்கம்

மழைநீர்த் தேக்கம் - நீங்கள் மழைநீரை இவற்றில் சேமிக்கலாம். குடிக்கவும், குளிக்கவும், துவைக்கவும் பாத்திரங்களைக் கழுவவும் மழைநீரை நீர்த்தேக்கங்களில் சேமிக்கலாம்.

குப்பைத் தொட்டிகள் : குப்பைகளைத் தரம் பிரிக்க உபயோகிப்பவை

புது சக்திகள் : விலங்குகளின் கழிவுகளில் இருந்து எரிசக்தி தயாரிக்கலாம். அவற்றை ஒரு தொட்டியில் இடவேண்டியதுதான். அவை புளித்து மீதேன் வாயுவை வெளியிடும். இந்த வாயுவால் கார், ஜெனரேட்டர் போன்ற இயந்திரங்களை இயக்கலாம்.

மக்குதல் : காய்கனி தோல்கள் மற்றும் கழிவுகளால் தோட்டத்து செடிகளுக்கு எரு தயாரிக்கலாம். இவற்றைக் குவித்து வைக்கலாம் அல்லது தொட்டிகளில் கொட்டலாம். அடிக்கடி கிளறி விட வேண்டும். சில வாரங்கள் கழித்து செடிகளுக்கு அடியில் பரப்ப வேண்டும். செடிகளுக்கு இந்த உணவு ரொம்ப பிடிக்கும்.

காற்றாலை மின்சாரம் : காற்றாலை போன்ற தோற்றமுடையது. உயர்ந்த தூணில் உள்ள 3 அலகுகள் மின்விசிறி போல காற்றில் சுழன்று மின்சாரம் உற்பத்தி செய்யும்.

சூரிய ஒளி பேட்டரிகள் : வீட்டுக்கூரை மேல் அமைக்கப்பட்ட பெரிய தகடுகள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும்.

சூரிய ஒளி கொதிகலன்கள் : சூரிய ஒளியின் உதவியால் நேரடியாகவோ வேறு வகையிலோ தண்ணீரைக் கொதிக்கவைக்கும் உபகரணம்.

சூரியன், காற்று, ஆறுகள், கடல், தாவர கழிவுகள் மற்றும் பூமியின் நடுபாகத்தில் உள்ள வெப்பம் போன்றவை தீர்ந்துவிடாத, மாசுபடுத்தாத தானே புதுப்பித்துக் கொள்ளும் சக்தி ஆதாரங்கள் ஆகும்.

சுற்றுக்சூழல் அகதிகள் : பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் மமாவாவின் நாடே கடலில் மூழ்கிவிடக்கூடும். சுற்றுச்சூழல் பாதிப்பினால் நாடிழக்கும் முதல் அகதிகளில் ஒருத்தியாகக் கூடும். தாழ்வான நிலப்பகுதியுள்ள மாலத்தீவு, பங்களாதேஷ், நெதர்லாந்து, ப்ரேசில், அமெரிக்கா மற்றும் கனடாவின் சில பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன.

உங்களுக்குத் தெரியுமா ?

- காம்பாக்ட் விளக்குகள் எரிய குழல் விளக்குகளைவிட 5 மடங்கு குறைவான மின்சாரம் போதும். 8 மடங்கு காலம் உழைக்கின்றன.
- மின் சிக்கன வீட்டு உபகரணங்கள் 5 மடங்கு குறைவான மின்சாரம் செலவழிக்கின்றன.
- நீர் கொதிக்கும் பாத்திரத்தை மூடி வைப்பதால் 3 முதல் 4 மடங்கு எரிசக்தி மிச்சமாகிறது.
- உலகெங்கும் தூக்கி எறியப்படும் கோடிக்கணக்கான பிளாஸ்டிக் பைகள் பூமியையும் கடற்கரைகளையும் மாசுபடுத்துகின்றன. விலங்குகளையும் கடல்வாழ் உயிர்களையும் கொல்கின்றன. 450 ஆண்டுகள் மக்காமல் மாசுபடுத்துகின்றன.
- உலகின் 40% மக்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை. தண்ணீர் விலை மதிப்பற்றது.



செய்கைகள் :

கூட்டாக உலகைக் காப்போம்

எப்படி ? சுற்றுக்சூழல் மாற்றத்தின் வேகத்தைக் குறைக்க நாம் எரிபொருள் உபயோகத்தைக் குறைக்கவேண்டும். சுடுநீரை வீணாக்கக்கூடாது. குளிரூட்டுவதை-யும் வெப்பமூட்டுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும். மின்சக்தியைச் சேமிக்க வேண்டும். நீங்களும் ஒத்துழைக்க முடியும். கீழ்க்கண்ட 5ல் 3 செயல்களை உங்கள் உறுதிமொழியாக பக்கத்தில் உள்ள இடத்தில் எழுதுங்கள். பின்புறம் ஒரு ஓவியம் வரைந்து துவாலு நாட்டு குழந்தைகளுக்காக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்

1) அறையைவிட்டு வெளியே போகும்போது விளக்குகள், மின்விசிறிகளை அணைப்பேன். மின் உபகரணங்கள் உபயோகத்தில் இல்லா-தபோது அணைப்பேன்.
2) கூடியவரை இயற்கை வெளிச்சத்தையும் இயற்கைக் காற்றையும் உபயோகிப்பேன். குளிர்சாதனப் பெட்டிகளை சரியாக மூடுவேன்.
3) குறைந்த நீரை பயன்படுத்தி விரைவாகக் குளிப்பேன். அவசியமானால் மட்டுமே வெந்நீரில் குளிப்பேன்.
4) தயாராக பெட்டிகளில் அடைக்கப்பட்டு விற்கும் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பேன். பொருட்களைப் பலமுறை பயன்படுத்துவேன். (ஒரே தாளின் இருபுறமும் எழுதுவதுபோல). வீணாகும் பொருட்களை மறுசுழற்சி செய்வேன். குப்பையைத் தரம் பிரித்து வெவ்வேறு தொட்டிகளில் கவனமாக இடுவேன்.
5) சிறு தூரங்களை நடந்தோ, மிதிவண்டியிலோ கடப்பேன். முடிந்தவரை பொது உபயோக ஊர்திகளையேபயன்படுத்துவேன்.

இறுதியாக, மிகமுக்கியம் : உங்கள் பெற்றோருக்கும், நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்தப் புத்தகத்தில் நீங்கள் தெரிந்துகொண்டவற்றை விளக்குங்கள். அவர்களும் உங்களைப் போலவே இந்தப் பூமியைக் காக்கட்டும்.

## உறுதிமொழி:

ஹ்யுகோவும் மமாவாவும் செய்யும் பூமியைக் காப்பாற்றும் இந்த முயற்சிக்கு என் பங்காக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கிறேன்.

1.

2.

3.




என் பெயர் :

என் முகவரி :

என் தொலைபேசி எண் :

என் ஈமெயில் முகவரி :

நான் வரைந்த ஓவியம்

## நீங்கள் செயல்பட வேண்டும்

ஓவியம், காட்சிகள் : கென்ட்
கதை : ஜூலியன் லு காளக், ஃபானி எரோஸ்
வண்ணம் : கிரிஸ்தீன் குத்தூரியே
வடிவமைப்பு : லின் லாவெஸ்க்

ஒத்துழைப்பு : இஸபெல் கோஸ்தர், அலிக்ஸ் க்ரய்யோ, ரஃபயில் மார்கயில், பத்ரிஸியா க்ளாரி, லிஸ்பெத் பெர்ஜே மற்றும் அந்தோனின் பெஞ்சமின்

மொழிபெயர்ப்பு : ஃப்ரெஞ்சிலிருந்து தமிழ் : ஆர். ஆனந்த்
நன்றி : ஈவ் லியர்ஸ், தோமினிக் கம்பனா, க்ளேர் போன்வில், லெய்தீனியா ரகோ, பசிபிக்கின் நிரந்தர செயலர், லு ஜூர் த லா தேர், லு ஜூர்னால் தெ ஸான்ஃபான் மற்றும் அனைத்து துவாலு மக்கள்

**பூமி போகுது நீருக்குள்ளே !**
**துவாலுவையும் மற்ற தீவு**
**நாடுகளையும் காப்போம் !!!**

ADEME

Agence de l'Environnement et de la Maîtrise de l'Energie

ALOFA TUVALU small is beautiful

**Alofa Tuvalu** 30, rue Philippe Hecht, 75019 Paris, France
www.alofatuvalu.tv

**Agence de l'Environnement et de la Maîtrise de l'Energie (ADEME)**
www.ademe.fr




N°Azur 0 810 060 050 PRIX D'APPEL LOCAL

Printing : Dawn Quality Cards
for
Dept. of Science, Technology and Environment
Government of Puducherry, Puducherry.